182

பதிவு எண்—M5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம்; விசய, மாசி; 5—3—54 தளிர் 20

14 APR 1954

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

வாணிகப் பெருக்கம்

நாட்டு வளர்ச்சியில் திருவள்ளுவர் உண்மையான அக்கறையுடையவர்! நாட்டு மக்கள் இன்பமாய் வாழ அவ்வாசிரியர் கூறும் நல் வழிகளைக் கடைப்பிடிப்பதைவிட வேறு வழி மக்களுக்கு இருக்க முடியாது.

உற்பத்திகள் பெருகவேண்டும்; பெருகி காலாபக்கமும் பரவி மக்களை இன்புறுத்தவும் வேண்டும்; இவ்விரண்டுக்கும் வாணிக முறை தேவை. வாணிகம் நன்கு நடந்தால் மட்டுந்தான், தக்க கருவிகள் தக்க காலத்தில் எளிதிற் கிடைத்து உற்பத்திகளும் நன்கு பெருக வழியுண்டு. வாணிகம் வளர்ந்தால் நாடு வளரும்; வாணிகம் தாழ்ந்தால் நாடு தாழும்.

வாணிக வளர்ச்சிக்கு ஆசிரியர் நுட்பமான வழியொன்று காட்டுகின்றார்; வாணிகத் திறமை வேறு, வாணிகப் பண்பு வேறு; வாணிகத் திறமை ஆக்கமுண்டாக்குமாயினும், ஆக்கத்தை நிலைக்க வைக்கவோ, வளர்க்கவோ, அமைதியும் இன்பமும் உண்டாக்கவோ அதனால் இயலாது. வாணிகப் பண்பென்பது முதன்மையாய் நடுவு நிலைமை! அது வாணிகத்தை நாட்டில் நல்ல பெயரெடுத்து நிலைப்பிக்கும். வர வர, எளிதில் ஆக்கம் மிகுக்கும்; நாளடைவிற் சிறு முயற்சியிற் பெரு நலம் விளைவிக்கும். வணிக மக்களிற் சிலர் இக் காரணத்தை அறியாமல், தம் எதிர்காலப் பெருவாழவை வீணாக்கிக் கொள்கின்றனர். நாட்டின் செழிப்பையும் பாழாக்கி விடுகின்றனர்.

வாழ்வும் வழியும் தெளியாதவர்களால் யாருக்குத்தான் என்ன பயன்? நாட்டுக்கே அவர்கள் ஒரு நோய்!

வாணிகம் செய்வார்க்கு
பேணிப் [வாணிகம்,
பிறவும் தமபோற் செயின்.

வாணிகம் செய்வார்க்குவாணிகம்—வாணிகம் செய்வோர்க்கு நல்ல வாணிகமாகும், பேணிப் பிறவும் தமபோல செயின்—பிறர் பொருள்களையும் தம் பொருள்களைப்போல் சமமாகப் போற்றி வாணிகம் செய்தால்.

அந் நடுநிலை தவறின் வாணிகம் தகுதியாய் நடவாது என்பது கருத்து.

பிறவும் தமபோற் செய்தலென்பது, பிறர் பொருளென்று மிகுதியாய் நல்லதாய் வாங்குவதும், தம் பொருளென்று குறைவாய் ஆகாததாய்க் கொடுப்பதும் செய்யாமல் ஒப்ப நடந்து கொள்ளுதல்.

'பிறவும் தமபோற் பேணி வாணிகம் செயின்' என்றார், வாணிக வளர்ச்சிக்கு அந் நடுவு நிலைமையே காரணமாதலின்.

காரணம் ஈதென்றறியாமல், ஏனைச் சூதும் வாதும் போல்வன வாணிகத்தில் மேற்கொண்டால் ஆக்கம் போலப் பெருகி அடியோடு அது கெடும் என்று இதனால் அறிவித்தாராயிற்று.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

ஆயுள்—
கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை 6	விசய, மாசி, 5-3-54 வெள்ளி	தளிர் 20

ஆட்சியும் மக்களும்

புறநானூற்றிலிருந்து ஒரு குறிப்பு.— ஓர் ஆண் யானையும் ஒரு பெண் யானையும் ஓரிடத்திலிருந்தன. ஒரு சிங்கம் வந்தது. இரண்டு யானைகளும் சிங்கத்தை உறுத்துப் பார்த்தன. சிங்கம் ஓடி விட்டது. உள்ளத்தில் குறைவில்லை; அச்சம் பயம் சோர்வு இல்லை. சிங்கத்தை எதிர்க்கும் ஆற்றலுடன் விளங்கின. சிங்க பலம் ஆட்சி பலம்; அரசனுடையது. அரசன் இருக்கை சிம்மாசனம். ஆனால், குடிமக்களிடம் நாட்டில் உலா வரும்போது, அரசன் யானை மேல் வருவான்; ஆதலால், யானை பலம் குடிமக்கள் பலம். பட்டத்து யானை என்றுண்டு; பட்டத்துச் சிங்கம் என்பதுண்டா?

நாட்டில் நடக்கும் நல்லன எல்லாம் குடிமக்கள் செய்வது. தவறு செய்தால் சிங்க வீறு கொண்டு திருத்துவான் அரசன். யானையின் அழகு, நுட்பத் திறம், பெருந்தன்மை, கண்ணியப் போக்கு, கருத்தில் உறுதி, உள்ளப்பண்பின் சிறப்பு, தேக திடம், வல்லமை, ஆற்றல் முதலியன போன்றது குடிமக்கள் பலம். சிங்கத்தின் வீறுபோல்வது அரச பலம். புறநானூறும் திருக்குறளும் சொல்வது ஒன்றே.

நாட்டில் நீதி உரைப்பது அறவோர்; நடத்துவது அரசன்; நடப்பது குடிமக்கள். ஆனை பலத்தால் நாட்டில் நலன்கள் பெருகும். தவறினால் சான்றோர் நீதியுரைப்பர்; அறப் பலத்துடன் மன்னன் சிங்கவீறு கொண்டு நீதி நிலைநாட்டுவான்.

உறுத்துப் பார்; உறுதியாய் நில்; ஏமாறாதே; ஆற்றல் கொள். இந்த அகமுக பலந்தான் சங்க நூல்கள் பேசியது.

இது லட்சம் மடங்கு மிகுதியாக, இக்காலத்தில் வேண்டும். எப்படியாவது ஏமாற்றிவிடலாம் என்று அயல் நாட்டினர் இனி நினைக்கவிடக் கூடாது. எடுப்பார் கைப்பிள்ளையாக இனியும் இருப்பதா?

தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியா[illegible] மொத்தமாகக் கூட்டுறவுடன் யார் உரிமைக்கும் பங்கம் வாராமல் பாடுபடவேண்டுவது அவசியம். இமயம் முதல் குமரி வரை முழுதும் முன்பு தமிழ் அரசன் குடைக்கீழிருந்தது. பழம்பெரும் தமிழகம் குறுகிக்கொண்டே வந்து, விந்திய மலைக்குத் தெற்கேயிருந்ததும் போய், இன்று வேங்கடத்திற்கும் தெற்கே குறுகி உரிமைக்குப் போரிட நேர்ந்திருப்பது வெட்கக் கேடு. பண்டைத் தமிழ் நாட்டின் பழைய பெருமைகளைப் பற்பல நாகரிகத் திட்ப வளர்ச்சிகளை, சங்க இலக்கியங்கள் தொல்காப்பியம் முதலியன பறைசாற்றுகின்றன. திருக்குறள் ஒன்றே கூடச் சான்றாகப் போதும். இதற்கு விழா பெரிதாகச் செய்ய வேண்டும். நம பழம் பெருமைக்கு அது விழாச் செய்வதாகும்.

உலகத்துக்குப்பலநாடுகளுக்கு, அறத்தை உரைத்தலால் வாழ்க்கைக்குப் பிழிசாறுபோலுதவும் திருக்குறளை மறப்பதற்கில்லை. தொல்காப்பியம் மறப்பதற்கில்லை. சங்ககாலச் சான்றாண்மையைச் சங்கநாத மிடுவதால் புறநானூற்றை மறப்பதற்கில்லை. இம் மூன்றும் மலையுச்சியில் வைக்கத் தக்கவை. நாடெங்கும் இந் நூல்களின் அருமை பெருமை விளங்கும்படி பெருவிழாக் கொண்டாடவேண்டும்.

மாம்பாக்கம் குருகுலத்தில் இவ்வுலகப் பொதுமறையாகிய திருக்குறளுக்குப் பாவலான செயலகம் அமைக்கச் சிறந்த நோக்கமும் நல்ல ஊக்கமும் கொண்டு பெருமுயற்சி நடந்து வருகின்றது. திருவருள் உதவுக!

—'மோ'

திருவாவடுதுறை ஆதீனம்

2. ஸ்ரீ மறைஞான தேசிகர்:

ஸ்ரீ மறைஞான தேசிகருக்கு ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் தீட்சை செய்து சிவஞானோப தேசஞ் செய்தருளினர். ஸ்ரீ மறைஞான தேசிகர் துறைசைப் பதியினர். பரம்பரைச் சைவ வேளாளர். சிவஞானோபதேசம் செய்த துணையானே அவர் தைலதாரைபோல இடையறு தருகிச் சிவஞான நிட்டையி லமர்ந்து சேவலற்றிருந்தார்.

ஸ்ரீ மறைஞான தேசிகருடைய மாணவர் ஸ்ரீ மெய்ஞ்ஞான முனிவர். அவர் திருவாவடு துறை என்னும் மாயூரப் பதியினர். பரம்பரைச் சைவ வேளாளர். 678 செய்யுட்கள் உள்ள திருவிழிமிழலைப் புராணத்தை அவர் இயற்றியுள்ளார்.

ஸ்ரீ மறைஞான தேசிகர் திருவாவடுதுறையிலே ஓர் தை மாதத்துச் சுவாதி நக்ஷத்திரத் திலே சிவபரிபூரணமுற்றார். ஸ்ரீ மறைஞான தேசிகருக்குப் பின் திருவிடைமருதூரிலே பரம் பரைச் சைவவேளாளர் குலத் திலே தோன்றித் தம்மையடுத் துத் தீட்சை முதலியன பெற் றுத் திருத்தொண்டு செய்து வந்த தம்பிரான்களிலே ஒரு வருக்கு நிர்வாண தீக்ஷை செய்து "அம்பலவாணர்" எனத் தீட்சா நாமமும் சாத்தி ஆசா ரிய அபிடேகமும் செய்து சின் னப் பட்டத்திலே ஸ்ரீ பஞ்சாக் கர தேசிக மூர்த்திகள் அமர்த் தினர். மற்றொருவராகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தி என்பவருக்கும் அவ்வாறே நிர்வாண தீட்சை செய்து ஸ்ரீ தட்சிணாமூர்த்தி என்ற அப் பெயரையே தீட்சா நாமமாகச் சாத்தி ஆசாரிய அபி ஷேகமும் செய்தார். இவர்க ளுள் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி தேசி கர் மெய்கண்ட சாத்திரக் கருத் துக்களை யுள்ளடக்கிய 'தசகாரி யம்' 'உபதேசப்பஃறொடை' என் னும் இரு நூல்களையும் அருளிச் செய்து திருவாவடுதுறையிலே சிவ பரிபூரணமுற்றனர்.

3 ஸ்ரீ அம்பலவாண தேசிகர்:

துவிதீய ஆசாரியராகிய அம் பலவாண தேசிகருடன் நெடுங் காலம் சித்தாந்த ஞானோபதே சம் செய்து பரமாசாரியர் வீற்றிருந்தருளினர். தமது ஆன் மார்த்த வைத்தியநாதத் தம்பி ரானை அழகிய திருச்சிற்றம்பல முடையவர் அம்பலவாணரென் னும் உபய மூர்த்திகளோடும் எழுந்தருளப் பண்ணிப் பூசித்துக் கொண்டு தமது அருளுபதேச பாம்பரையைப் புரந்து வருமாறு துவிதீய ஆசிரியராகிய ஸ்ரீ அம் பலவாண தேசிகருக்குக் கட்டளை யிட்டருளி ஸ்ரீ நமச்சிவாய மூர்த் திகள் ஒரு தை மாதத்து அசு வனி நட்சத்திரத்தில் திருவாவடு துறையிலே சிவ சோதியில் இரண்டறக் கலந்தருளினர்.

அவர் அருளிய நூல்கள்:

மூன்றாவது பட்டத்திலெழுந் தருளிய ஸ்ரீ அம்பலவாண தேசி கர் தசகாரியம், சன்மார்க்க சித் தியார், சிவாசிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித் தாந்த சிகாமணி, உபாய நிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசய மாலை, நமச்சிவாய மாலை என் னும் செய்யுள் நூல் பத்தும்; சிவ ஞான போத சிந்தனை யென்னும் உரை நூல் ஒன்றும், பூப்பிள்ளை யட்டவணை முதலிய சிறு நூல்க ளும் பிறவும் அருளிச் செய்தனர்.

4 ஸ்ரீ உருத்திர கோடி தேசிகர்:

பின்பு ஸ்ரீ அம்பலவாண தேசி கர் ஸ்ரீ உருத்திரகோடி தேசிக ருக்கு ஆசாரியாபிஷேகம் செய்து சைவ சித்தாந்த சாத்தி ரங்களை உபதேசம் செய்தருளி னர். ஸ்ரீ அம்பலவாண தேசிகர் திருவாவடுதுறையிலே ஒரு சித் திரை மாதத்து அஷ்ட நட்சத் திரத்திலே சிவபரிபூரண முற்ற னர். ஸ்ரீ உருத்திரகோடி தேசிகர் பீடத்தி லெழுந்தருளிச் சித்தாந்த சைவ ஞானோபதேசம் செய்து கொண்டு சிவத்தியானபாரா யெழுந்தருளியிருந்தார். அவ ருடைய அடியார் கூட்டத்திலே சிறந்து விளங்கிய தம்பிரான் சுவாமிகளாகிய ஸ்ரீஈசான தம்பி ரான் மகிமைகளையும், ஸ்ரீ மகா சந்நிதானத்தின் சிவானுபூதிச் செல்வ வாழ்க்கையையும் பெரு மையையும் நன்கு தெரிந்த மது ரைச் செவ்வந்தியப்ப நாய்க்கர் என்பவர், (1) பாவநாசம் (2) திருப்புடை மருதூர் (3) செவ்வல் (4) திருநெல்வேலி (5) முரப்ப நாடு (6) வள்ளியூர் (7) கன்னியா குமரி (8) சுசீந்திரம் என்னும் எட்டு ஊர்களிலும் மடாலயம் அமைத்து அவற்றிற்கு வேண் டிய கிராமங்களும் அளித்தார். அக்கால முதலாக ஆதீனத்துக் குப் பொருள் வருவாய் ஏற்படத் தொடங்கியது. இங்ஙனம் நாய்க்கர் கிராம சாசனம் செய்து கொடுத்தது சாலிவாகன

சகம் 1537, 1539, 1543 ஆம். கி—பி. 1605, 1607, 1611, என்பன அவற்றிற்கு நேரான காலம். ஸ்ரீ உருத்திரகோடி தேசிகர் தம் அடியவர்களுட் சிறந்த வேலப்பத் தம்பிரான் என்பவருக்கு ஆசாரியாபிடேகம் செய்து தமக்குத் துவிதீய ஆசிரியராக அமர்த்தினர்.

5. ஸ்ரீ வேலப்ப தேசகர்
6. ஸ்ரீ குமாரசாமி தேசிகர்
7. ஸ்ரீ பிற்குமார தேசகர்
8 ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்

இவர்கள் சோழ நாட்டில் திருவெண்காடு என்னும் சிவதலத்திலே அவதரித்தவர்கள். பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே அபிஷிக்தர் மரபு. திருஞானசம்பந்தப் பிள்ளையார் பீடத்திலே மிகமிக ஈடுபாடுடையவர்கள். இளமைப் பருவத்திலேயே தமிழ் இலக்கிய இலக்கண நூற்பயிற்சியும் மிக்கவர்கள். சமய நூல் ஆராய்ச்சி உடையவர்கள். தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமுறைகளிலும் பேரறிவு படைத்தவர்கள். இலக்கணக் கொத்து சாமிநாத தேசிகருடைய ஞான பிதா. இவரைக் கல்லாட உரையாசிரியர் மயிலேறும் பெருமாள் பிள்ளை வேண்டுகோளுக்கிசைந்து ஈசான தேசிகர் என்ற பட்டத்துடன் சங்காபிஷேகம் செய்து தம் ஆதீனத்து இரண்டாவது இளவரசராக வைத்துக்கொண்ட துறவரசர். மகேசுர பூசைச் சிறப்பால் தஞ்சை மன்னரை வணக்கியவர்கள். கி. பி. 1925-1658 வரை 33 ஆண்டுகள் பட்டத்தில் இருந்தவர்கள்.

9. ஸ்ரீ இராமலிங்க தேசிகர்

மாசிலாமணி தேசிகருக்குப் பின் பட்டத்தில் எழுந்தருளியவர்கள்.

10. வேலப்ப தேசிகர்

இவர்கள் அடியார்களில் ஒருவராகிய சாஸ்த்திரம் ஸ்ரீ சாமிநாத முனிவர் திருவாவடுதுறைப் புராணத்தையும், திருப்பெருந்துறைப் புராணத்தையும், அருளினார்.

ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் ஞானாசிரியர் பேரூர் வேலப்ப தேசிகர். மாதவச் சிவஞான சுவாமிகள் மாணவர் பன்னிருவர்.

பேரூர் ஸ்ரீ வேலப்ப தேசிகர்:

சின்னப்பட்டத்திலே யிருந்த பேரூர் ஸ்ரீ வேலப்ப தேசிகர் சுசீந்திரத்திலே வீற்றிருந்து தமது ஞானாசிரியர் கட்டளைப்படி தம்மை யடுத்த பக்குவர்கட்கு அனுக்கிரகம் செய்து வருவாராயினர். அக் காலத்திலே பஞ்சாக்கரப் பஃறொடை என்னும் ஒரு ஞான நூலை இயற்றியுபகரித்தார்.

தம்பிரான்களும் தல யாத்திரை [illegible] களும்:

தமிழ் மக்கள் உய்யும் வண்ணம் இவ்வாதீனத்து உபய சந்நிதானங்களும், தம்பிரான் சுவாமிகளும், அடியவர் கூட்டங்களும் அடிக்கடி தமிழ் நாட்டிலே சிவதல யாத்திரை செய்து அங்கங்கேயுள்ள அன்பர்கட்கு அனுக்கிரகம் புரிந்து சிவ பத்தி குரு பத்தி அடியார் பத்தி முதலியன குன்றாமல் தமிழ் மொழியையும் சித்தாந்த சைவ சமயத்தையும் வளர்த்து வருவாராயினர். சில சமயங்களில் அற்புதச் செயல்களால் மக்களை வசமாக்கி ஆதீனத்துக்கு அடிமைப்படுத்தி அன்பு வளரச் செய்தனர். பலருக்கு நோய்களைப் போக்கி உபகாரமும் செய்து அவர்களால் மனமுவந்து கொடுக்கப்பட்ட பொருள்களை ஆதீனத்திலே சேர்த்தும் வந்தனர். தம்பிரான்களில் பலர் வித்துவான்களாகவும், மந்திர சித்தி பெற்றவர்களாகவும், மருத்துவ முறையிலே தேர்ந்தவர்களாகவும் இருந்து ஆதீனத்துக்குப் பல்லாற்றானும் நன்மையும் நன்கு மதிப்பும் உண்டாகுமாறு செய்து வந்தனர். ஞான தேசிகர்கள் உலகுக்குப் பயன் தரத்தக்க தம்பிரான்கள் முகமாக எல்லாவற்றானும் மக்கட்குப் பயன்பட்டு வந்தனர். அதனால் அரசரும், அரசச் செல்வமுடைய பிரபுக்களும், தமிழ் மொழி வடமொழி வல்ல பெரும்புலவர்களும், பொதுமக்களும் அடிக்கடி வந்து ஞானதேசிகரைத் தரிசித்து அளவளாவியிருந்து மகிழ்ந்து செல்வர்.

தங்களுக்குத் தேவையான
எல்லா விதமான மருந்து வகைகளும்
எங்களிடம் எப்பொழுதும்
கிடைக்கும்.

மேயர் அண்டு கம்பனி,

இங்கிலீஷ் மருந்து வியாபாரிகள்,
16. ஐயா பிள்ளை தெரு,
பி டி சென்னை-3.

டெலிபோன் 3757 போஸ்டு பாக்ஸ் நெ 504.

செம்பியன் மாதேவியார்

வாழ்க்கை வரலாறு:

செம்பியன் மாதேவியார் என்னும் சிவநேசச் செல்வியார் ஒன்பதாம் சைவத் திருமுறையாகிய திருவிசைப்பா ஆசிரியர்களில் ஒருவரான கண்டராதித்த சோழ தேவரது வாழ்க்கைத் துணைவியாக வாய்ந்தவர். கண்டராதித்த சோழ தேவர் இம்மாதேவியார்பால் பேரன்பும் மதிப்பும் உடையவராய் இருந்தார்.

இவரது புதல்வன் மதுராந்தகன் உத்தம சோழன் என்பான். இவன் சிறுவனாயிருக்கும்போதே கண்டராதித்தர் கண்ணுதற் பெருமான் கழலடி சேர்ந்தார். மாதேவியார் கைம்மை நோன்பு பூண்டு கடவுள் பணியில் காலத்தைப் பயன்படுத்துவாராயினர். புகுந்த குடியின் சிறப்புடன் பிறந்த குடியாலும் சிறப்புடையார் இம்மாதேவியார். இவர் மழவர் மகளராவார்.

மழவர்கள் கொல்லி மலையையும் அதன் சூழலையும் தமதாய்க் கொண்டு ஆண்டுவந்த ஒரு பழந்தமிழ்க் குடியினர். வள்ளன்மையும் வீரமும் மிக்கவர். அகம் புறமாகிய சங்கப் பாட்டுகள் பலவற்றில் இம் மழவரின் சிறப்பைக் காணலாம். அருமலை விடரகத்துப் பெற்ற அமுதவிளை நெல்லித் தீங்கனியை அரிதிற் பெற்று அருந்தமிழ் மூதாட்டியாகிய ஔவைக்குச் சாதல் நீங்க ஈந்து புகழ் பெற்றவனும், கடையெழு வள்ளல்களில் ஒருவனுமாகிய அதியமான் நெடுமானஞ்சி இம் மழவர் தலைவனே. இவ்வதியமான், அஞ்சி என்றும் வழங்கப்படுவான். திருஞானசம்பந்தப் பெருமானருளால் தன் மகளது முயலக நோயை நீக்கிக் கொண்ட கொல்லி மழவனும் இம் மழவரைச் சேர்ந்தவனே. எனவே, சங்க காலம் முதல் செம்பியன்மாதேவியார் காலமாகிய கி. பி பத்தாம் நூற்றாண்டு வரையிலும் இம் மழவர் தம் பெருமை குன்றாது வாழ்ந்திருந்தனர்.

இம் மாதேவியார் கட்டியவையும் செப்பனிட்டவையும் கட்டுவித்தவையுமான சிவன் கோயில்கள் பல. இவரால் நிபந்தம் அளிக்கப் பெற்ற கோயில்களும் பல.

கட்டிய கோயில்கள்:

தஞ்சாவூர் ஜில்லா மாயூரந் தாலுக்காவிலுள்ள கோனேரிராசபுரம் என்னும் திருநல்லத்தில் உள்ள திருநல்லத்து மகாதேவர் கோயில் இவர் கட்டிய * கற்கோயிலாகும். முன்பு செங்கல்லால் கட்டப்பட்டிருந்ததை இவர் தம் புதல்வர் உத்தம சோழ தேவரின் ஏழாம் ஆட்சியாண்டில் கி பி. 976 ஸ்ரீ கண்டராதித்தன் என்னும் திருநாமத்தால் கற்றளியாக்கினர். இத் தளியில் இவர் தம் கணவனது பிரதிமம் திருநல்லத்து உடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளது. இதன்பின்னர் கும்பகோணம் தாலுக்காவில் * தென்குரங்காடுதுறைக் கோயிலும், மாயூரந் தாலுக்கா ஆனாங்கூர் (ஆநாங்கூர்) † அகத்தீச்சரமும் ஷை தாலுக்கா குத்தாலம் என்று வழங்கப்பெறும் ‡ திருத்துருத்தி

---

* ஸ்வஸ்தி ஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவடிகளாரான ஸ்ரீ செம்பியன் மாதேவியார் தம்முடைய திருமகனார் உத்தம சோழர் திரு ராஜ்யஞ் செய்தருளாநிற்கத் தம் உடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் திருநாமத்தால் திருநல்லமுடையார்க்குத் திருக்கற்றளி எழுந்தருளுவித்து இத் திருக்கற்றளியிலேய் திருநல்லமுடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளுவித்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் இவர்.

* ஆடுதுறைச் சிவன் கோயில் கருப்ப இல்லின் தென்புறச் சுவர்:- ஸ்ரீ மதுராந்தக தேவரான ஸ்ரீ உத்தம சோழ தேவரைத் திருவயிறு வாய்த்த உடைய நம்பிராட்டியார் மாதேவடிகளாரான ஸ்ரீ செம்பியன் மாதேவியார் திரைமூர் நாட்டுத் திருக்குரக்காடுதுறை ஆழ்வார்க்கு எடுப்பித்தருளின இத் திருக்கற்றளியிலேய் முன்பு இத் தேவர்க்குச் சந்திராதித்தவல் செய்தன லக்ஷணபடி கண்டு, இவிலக்ஷணங்கள் மூத்து போக ஸ்ரீ உத்தம சோழ தேவரான கோபரகேசரிபன்மற்கு 16 ஆவது கல்மேல் வெட்டின. (S.I.I. Vol. III Part III)

குறிப்பு:- லக்ஷணபடி = கல் எழுத்துக்கள்படி. மூத்து போக— நீண்ட காலம் ஆகிப் போக.

† ஆனாங்கூர் கருப்பஇல்லின் மேல்புறச் சுவர்:-
உ உத்தமசோழ தேவரைத் திருவயிறுவாய்த்த செம்பியன் மாதேவிப் பிராட்டியார் இத் தேவர்க்குத் திருக்கற்றளி செய்து தேவதானமாக இட்ட இன்னாட்டுப் பனங்குடி நிலம் மூன்றரையே மூன்றுமா முக்காணி. (இக் கல்வெட்டு இதுகாறும் வெளிவந்திலது.)

‡ கர்ப்ப இல்லின் கிழக்குப் புறச் சுவரில் தொடங்கி, வடபுறச் சுவரிலும் தொடர்ந்து செல்லும் கல்வெட்டு:-
"இத் திருக்கற்றளி எடுப்பித்து, இத் தேவர்க்கு......த்த உத்தமசோழ தேவரை திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் செமபியன் மாதேவியார் கோராஜராஜகேஸரிவன்மற்கு யாண்டு ஏழாவதில் அருளிச்செய்த ஸ்ரீ--வின," என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. இக் கல்வெட்டு இதுகாறும் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் வெளிவந்திலது.)

சொன்னவாறு அறிவார் கோயிலும், திருமணஞ்சேரி திருக்கற்றளி மகாதேவர் கோயிலும் கும்பகோணம் தாலூகா திருநறையூரில் சித்தீஸ்வரமுடையார் கோயிலும், நாகபட்டினம் தாலூகாவில் திருவாரூர், திரு அரநெறிக்கோயிலும், தென்னார்க்காடு ஜில்லாவில் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) அம்மன் கோயில் சோபான மண்டபம் கோபுரம், * பரிவார தேவர்கள் கோயில் ஆகியவைகளும் இம்மா தேவியாரால் கட்டப் பெற்றனவாகும்.

திருவக்கரை சந்திரமௌலீஸ்வரர் கோயில் இவரால் இறுதியில் கட்டப் பெற்றனவாகும்.

எடுப்பிக்கப்பட்டவை:

முதலாம் இராசராச சோழன் தஞ்சை இராசராசேச்சரத்தை எடுத்ததும் இவருடைய உதவியாலும் தூண்டுதலாலுமே இவ்வம்மையார் கட்டிய கோயில்களே கங்கைகொண்ட சோழன் முதலியோர் பிற்காலத்தே கோயில்கள் கட்டுதற்கு ஊக்கமளித்தன.

செப்பனிட்டது.

திருவெண்காட்டுக் கோயிலில் ஒரு பகுதியைச் செப்பனிட்டார்.

திருவெண்காடு தேவர்க்கு
அளித்த நிபந்தங்கள்

திருவெண்காடு தேவர்க்கு ஸ்நாநஞ் செய்ய(ஸ்நாநஞ் செய்து வைத்ததற்கு)க் கொடுத்த செப்புக் கலசம் 3. செப்புக்குடம் ஒன்று, செப்புக் கரகம் நான்கு, வச்சக் குழுடச் செப்புக் கல் மூன்று, இக்கனையுமாய்க் கூட்டு நிறை, இக் கோயில் வெள்ளிக் கோலால் இரண்டாயிரத்து நாற்பத்தெண் பலம். இவைகள் எல்லாம் உத்தம சோழ தேவரின் நான்காம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பெற்றன.

மேலும், திருவெண்காடு தேவர்க்குக் கொடுத்த பொன்னின் கொள்கை ஒன்று நிறை ஆயிரத்து முந்நூற்றுக் கழஞ்சு. இதில் சிகரத்திலும் நான்கு முகத்திலும் ஆக நீள மாணிக்கம் அச்சு வைரம் அறுபத்திரண்டு முத்து மூவாயிரத்து இருநூற்று அறுபத்தொன்று. இவைகள் உத்தம சோழதேவரின் நான்காம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பெற்றுள்ளன.

மேலும், முதலாம் இராசராச சோழரின் மூன்றும் ஆட்சியாண்டில் வெண்காடர்தம் கோயில் மேல் ஒரு டைப் பொற்குடம் ஓராயிரத்து ஐந்நூற்றுக் கழஞ்சு நிறையுள்ளதை வைத்துள்ளனர்.

மழவர்கோன் பெற்ற அரும் செம்பியன் மாதேவியே இவ்வாண்டில் (இராசாசரின் மூன்றும் ஆண்டு) வைத்த பொன்னின் அகோரத் திருமேனி ஒன்று; நிறை நாலாயிரத்து எண்ணூற்று ஐங்கழஞ்சே முக்கால் இத் தேவர்க்குச் செம்பினாற் செய்த பத்மத்தின் மேற் போத்தகடி இரண்டுக்கு மாணிக்கமாக பொன் நிறை இருபத்தெண்பதின் கழஞ்சே முக்கால். இத் தேவர்க்குச் செய்த வெள்ளிப் பிரபை வெள்ளி இருநூற்று எண்பத்து அறுகழஞ்சேய் மூன்றும், இசாடி இதன் மேல் போத்த பொன்நிறை நூற்று ஐம்பத்தொன்பதின் [illegible]கால். இத்தேவர்க்குச் [illegible] ஆபரணங்கள் கம்பி இரண்டும், [illegible]த்தி ஈரணையும் வாளி ஒன்றுமாக பொன் நிறை இருகழஞ்சு முத்து ஐந்து, கோவல்லி லடம் இரண்டு, முத்து இருபத்தெட்டு, பவழம் இரண்டு, ராஜவிதம் இரண்டு மாணிக்க மாலை ஒன்று, பொன் ஒன்பதின் கழஞ்சு, இதன்மேல் ஏறின மாணிக்கம் ஆறு, பளிங்கு த விக் கட்டின முப்பத்தாறு வயிரம், இரமக்கம் மூன்று, முத்து இருபத்தேழு மேல் தாணிச்ச பட்டிகை ஒன்று எண்பத்து மூன்று கழஞ்சு, மாணிக்கம் ஒன்று, பளிங்குமாணிக்கம் பத்தொன்பது, பளிங்கு வைரம் பத்து, பொத்தி மூன்று, முத்து இருநூற்று ஒருபத்திரண்டு இத் தேவர்க்கு வாகுவல்யம் இரண்டினால் பொன்நிறை கழஞ்சு, இதில் மாணிக்கம் இரண்டு, வைரம் ஆறு, முத்து தொண்ணூற்றிரண்டு. வெண்சாமரை ஒன்று, இதன் கை பொன் நிறை நூற்றிருபதின்பலம். இவ்வாண்டே கொடுத்த பொற்பூ ஒன்றினால் நிறை முக்கழஞ்சரை; இவ்வாண்டே, அவர் எழுந்தருளுவித்த சந்திரசேகரப் பெருமானுக்கு அமுதுக்கு அளித்துள்ளனர்.

—திருவாவடுதுறை ஆதீன
வெளியீடு.

---

* பரிவார தேவர்கள்:- விநாயகர், முருகர், நந்திதேவர், சண்டேசுவரர், வைரவர், சூரியன், சந்திரன் [illegible]

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros,
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

திருவள்ளுவர் கண்ட நாடு

(மோகனரங்கன்)

(முன் தொடர்ச்சி)

திருவள்ளுவர் முதலில் உழவு விளைவு உற்பத்திப்பெருக்கு வாணிபம் முதலிய நாட்டு வளங்கள் பற்றிப் பேசிக் கடைசி குறளில் அரசியலைப்பற்றிக் கூறியிருக்கிறார். இக்காலத்திலோ முதலில் அரசியல் பேச்சு; அரசியல் செல்வாக்குக்கு மதிப்பும் முதன்மையும் கொடுக்கப்படுகின்றன. இது இயற்கைப் போக்கன்று.

நாடு கருத்தில்தான் பேசுகிறேன். சான்றோர்களுக்கு மதிப்புத் தராத நாடு மேம்படாது. அவர்கள்தான் நாட்டில் நீதி காத் தக்கவர்கள். நம் பிறவிக்கு, மேலான சீரிய கருத்தாகக் கொள்ளவேண்டுவது. திருவள்ளுவர் அப்படி அழுத்தமாகக் கூறியிருக்கிறார். வெறும் படிப்பாளர்களுக்கும், பட்டதாரிகளுக்கும், பகுத்தறிவாளர்களுக்கும் இந்த இடத்தில் (திருவள்ளுவர் உள்ள இடத்தில்) இடமில்லை; சிறந்த மெய்யுணர்வுப் போக்கினுள்ளதுதான் நாடு. பொருளாதாரம் செழிக்க, மற்றவை சரியானபடி நடக்க, பாகன்போலிருந்து செலுத்தும் தக்கார், நடுநிலையுள்ள மேலோர் அவசியம் வேண்டும். சான்றோர்களைப் போற்றுவோம், பொருளாதாரம் பெருக்குவோம்; செங்கோலாச்சு அறமுறையில் நடக்கும்; எங்கும் அறம் அன்பு நேர்மை நியாயம் நீதி உண்மை மெய்ப்போக்குகள் அமையும்; பொருளாதாரத்தில் உழைப்பு பற்றி ஆள்வினை யுடைமை, வினை செயல்வகை முதலியவைகளில் பேசினர். நாம் அவர் சொல்லியதைச் செயலில் காட்டும் மகா வீரர்களாக நல்ல அறிவோடும், அன்போடும், பெருந்தன்மை பரந்த உள்ளத்தோடும் நடந்து கொண்டு நாட்டின் சுபிட்சத்திற்குப் பாடு பட வேண்டும்.

இன்பப்பால், கலைப்பால்; பொருட்பால், பண்டம்; அதை அழகுபடுத்துவது கலைப்பால். உதாரணமாக: நெல், விளைகிறது. வயலிலிருக்கும்போதே அதை அழகாக ரசிப்பது; அதன் இயற்கை அழகில் ஈடுபடுவது. (பெரிய புராணத்தின்கண் சேக்கிழார் அடிகளார் இவ்வியற்கை அழகுகளை எவ்வளவோ அற்புகமான வகைகளில் சித்திரித்திருக்கிறார்) சொந்தக்காரர் தன்மையில் 40 கலன் விளைவதை 400 கலனாக விளைவிக்கச் செய்வோம். உண்ணும்போது உண்ணுவோம்; பயிராக இருக்கும்போதும் அதன் இயற்கை அழகைத் துய்க்கும் மனப்பான்மை வேண்டும். "செவிக்கு உணவு இல்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" நாம் பண்டத்தை அனுபவித்தற்கு மேலாக, "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒண்தொடி கண்ணே உள;" அதனால் அனுபவிக்கத் தக்க கலை உள்ளம் வேண்டும். கல்லூரிகளிலிருந்து வெளி வந்து, வாழ்க்கையும் கலையும் உயராதிருப்பதும் இரண்டும் கெடுநிலையிலுள்ளதும் காண்கின்றோம். கல்வியல்ல கலைத்திறம்; விஞ்ஞானம் (Science) வேறு, கலைத்திறம் (Arts) வேறு நல்ல அழகுகளிருந்தும் அநுபவிக்கத் தெரியாதிருந்தால் எப்படி? ஆனால் அதே நேரத்தில் மெய்யுணர்வுக்குப் பங்கமில்லாமலிருக்க வெண்டுவதும் கட்டாயம்.

இசைக் கச்சேரிகளில் செவிக்கின்பமாக இருக்கிறதென அறத்திற்கு மாறான அநாகரிகப்பாடல்களைப் பாடுவதால் உள்ளமும் ஒழுக்கமும் ஒருங்கே கெடும். அதுமட்டுமன்றி இவ்விசையரங்குகளில் 'துக்கடா' என்று, ஒப்புயர்வற்ற நிலையில் அருமையும் பெருமையும் வாய்ந்த தேவாரம் திருப்புகழ் திருவாசகம் திருவருட்பா முதலான மெய்ஞ்ஞானப்பாடல்களை ஒதுக்கிவைத்திருப்பதும் அவைகளுக்குக்கடைசி இடம் கொடுப்பதும் நம் நாட்டுக்கே மிக்க வெட்கக் கேடான நிலை இந்த நிலை என்று மாறும்? அப்படியே நூல் எழுதுபவர், கவிஞர்கள், படம் பிடிப்பவர்கள் முதலியோர்களும் அறம் மறவாது கவனித்து ஒழுக வேண்டும்; மேற்சொன்னவை உதாரணமாகக் கொண்டு மற்ற எல்லா வாழ்க்கைத் துறைகளையும் சீர்ப்படுத்த வேண்டும். அறத்துக்கு மெய்யுணர்வுக்கு உண்மைநெறிக்கு சத்தியப் போக்குக்கு இழுக்கில்லாமல் இந்நாட்டுப்பெரியோர்கள் காட்டும் முறைகளில் தெளிந்த தன்மையில் செல்வ வாழ்க்கை சிறப்பாக அமையும்.

ஓர் அழகிய ஓவியத்தைப்பார்த்ததும் அதைத் தீட்டிய ஓவியக் கலைஞனை ஞாபகம் கொள்வது போல், உலகில் மின்னும் இயற்கை அழகுகளை ரசித்துக் கொண்டே இவைகளுக்கு மூல காரணமான இறைவனை அறிய முற்படவேண்டும். மாதுளைப்பழத்தில் அவ்வளவு அழகிய வித்துக்களை அழகுற அணி அணியாய் அமைத்த இயற்கைச சக்தி அறிவற்றதாகுமா?

கொழுந்தோடிய அறிவுத் திறம் படைத்த ஓர் அற்புத

இயற்கைச்சக்தியாகிய அம்பிகையின் லீலா விநோதங்களல்லவா இவ் வையமெல்லாம் நிகழ்வது. ஒவ்வோர் அணுவிலும் இறை சக்தியைக் காணலாம். திருவள்ளுவர் பொருளை அப்படி சுவைத்துத் துய்க்கச் செய்து மெய்யுணர்வில் உய்க்கிறார்.

பொருளைத் தேடு; அழகு பண்ணிக்கொள், நன்றாய்ச் சுகி; ஆனால், அறம் மறவாதே, ஒழுங்கு விடாதே. இறைவனைப் பற்றிக்கொள் என்கிறார்.

திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் என வகுத்து அற அடிப்படையில் பொருளைத் தேடி இன்பமனுபவித்து இறைவனையடைதலையும், தொல்காப்பியர் இன்பம் பொருள் அறம் என அமைத்து நோக்கமும் போக்கும் அறத்தில் முடியவேண்டுமென்றும் வகுத்திருக்கின்றனர்.

இன்பப்பாலில் 25 அதிகாரங்கள் சரிவர அறிந்து அனுசரிக்க, தவறிய நெறிகளில் போகாமல மெய்ஞ்ஞானத்திற்குச் செல்வர். இன்பப் பாலில், புத்திரப்பேறு பற்றி வரவில்லை; அது கடமை பற்றி நிகழ்வதாதலின் அறத்துப் பாலில் வரும்; இன்பப் பாலில் அழகியல்களைப் பற்றித்தான் சொல்லி இருக்கிறார். மனிதர் மனிதராக, மக்கள் மக்களாக் விளங்கி வாழ்வே இன்பப்பால் கலைப்பால் அமைத்திருக்கிறார். ஏனென்றால், மனப்பயிற்சி, கலைப்பயிற்சி; மனம் படைத்தவர், மனிதர்.

“அறத்தான் வருவதே இன்பம்; மற்று எல்லாம் புறத்த; புகழும் இல”; உலக முழுதும் முடிபோல் கொள்ளத்தக்க குறள். அதே நோக்கமாக உலகெங்கும் கொள்ளும்படி பிரசாரம் செய்யப் பல பெரியோர்கள் மு[illegible] பட வேண்டுவது அவசியம். நம் இந்திய நாட்டில் ஆசிய ஒளியாகிய நேரு போன்ற சில பெரியோர்களிருப்பதாலேயே மற்றோர் உலகப்போர் மூளாதிருக்கிறது.

உலகப் பொது மறையாகிய திருக்குறளில் சொல்லப்படாத தொன்றுமே இல்லை எனலாம். சில உதாரணங்கள்:— இல்லறம் துறவறம் என்னும் இரண்டும் ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் மேற்கொள்ளச் சொல்கிறார். ‘துறவறம்’ என்றால் வீட்டை விட்டு எங்கோ ஓடிவிடுவதன்று; எல்லா உலகவாழ்க்கை இன்ப துன்பங்களிடையிலிருந்துகொண்டே பற்றற்ற நிலையில் தாமரை இலையில் தண்ணீர் போன்று ஒட்டியும் ஒட்டாதும் இருந்து உலகத் தொண்டாற்றி வருதல். ‘அவா அறுத்தல்’ என்றால் தீய முறைகளில் செல்லும் அவாவை, அறுப்பது; அவா வேறு, விருப்பம் வேறு; நிரம்பாத தன்மை அவா. நல்லவைகளில் விருப்பம் கொள்ளலாம். ஆனால் அவா எதிலும் அற வேண்டுவது. ஊழைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். ஊழ் என்றால் முறை; முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினை முறையாக முற்றி வருவது; வாழ்க்கைக்கு விதை போன்றது விதி. விதிவழி நடப்பதா? அன்று; ஊழை எதிர்க்கும் உரிமை நமக்குண்டு. முயற்சியிருந்தால் கட்டாயம் மாற்றலாம். வாழ்க்கையில் நம்பிக்கையின்றிச் சோம்பிக் கிடக்காமல் ஊக்கம், முயற்சி, துணிச்சல், தீரம், வீரம் கொண்டு அறமுறையில் நடந்து ஊழை மாற்றலாம் என்கிறார்.

திருக்குறள் நீதி நூல்; தப்பு தீங்கு இயன வெறுப்பன செய்தாரையும் பொறுத்துக்கொள்ள வேண்டும்; தண்டித்தல் கண்டித்தல் கூடாதென்பதோடு நில்லாமல் அவர்கள் காணும்படி அவர்களுக்கு நல்லன செய்து மறந்து விடவேண்டுமென்கிறார். “இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்” இத்தகைய கண்ணியமான போக்குதான் சான்றோருடையது. திருக்குறள் மொத்தத்தின் பிழிவு சான்றாண்மைதான்; தக்கார் ஆவது. அதே நிலையில் குடிமக்கள் வளர்ச்சி; இச் சான்றாண்மை இயக்கம் நாட்டில் நன்றாய் நடக்குப்போது எல்லாம் செவ்வனே அமையும்.

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்

நூலாடைகளுக்கும்

சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,

53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாமபாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)